JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **25/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 9** | Prosecution /Defence / Court | |
| Name | குணசேகரன் | Village | ஆறுமுகம் நகர்,. பொள்ளாச்சி, |
| Father's Name | சண்முகம் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 19.05.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மற்றும் மாதம் சரியாக நினைவில் இல்லை. ஆஜர் எதிரி என்னிடம் டிரைவராக வேலை பார்த்து வந்தார். இரவு 7.30 – 8.00 மணி இருக்கும் நான் சேலத்திற்கு திருமணத்திற்காக நானும், எனது மனைவியும் பெருந்துறை வாவிக்கடை பிரிவு அருகில் சென்று கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி தான் என்னுடைய வண்டியை அன்றையதினம் ஓட்டினார். திடீரென்று முன்னால் பிரேக் பிடித்த சத்தம் கேட்டது. நான் இறங்கி பார்த்த போது ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றவர் மீது என்னுடைய கார் மோதி விட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து விபத்து பற்றி தகவல் சொன்னேன் கூட்டம் கூடி விட்டது. எதிரி இருசக்கர வாகனத்தில் வந்தவர் உள்ளே வந்து விட்டார் என்று சொன்னார். என்னுடைய செவரலெட் காரின் பதிவு எண். TN 66 D 7779 ஆகும்.

2. பின்னர் விபத்தில் அடிபட்டவர் இறந்து விட்டதாக கேள்வி பட்டேன். எங்கள் காரையும் எதிரியையும் தேடுவதாக கேள்விபட்டு காரையும், எதிரியையும் காவல் நிலையத்தில் ஆஜர் படுத்தினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** போலீசார் விசாரிக்கும் போது என்னுடைய தங்கையின் திருமணத்திற்காக சென்று கொண்டிருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் நான் காரில் பின்னால் அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் டமார் என்று சத்தம் கேட்ட பின்னர் எழுந்து பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தானது இறந்து போன மேகநாதன் திடீரென்று குறுக்கே வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேகநாதன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. அவர் எந்த வண்டியில் வந்தார் என்றும் எனக்கு தெரியாது. எதிரி சாலை விதிகளை சரி வர கடைபிடித்து இடது ஓரமாக சென்று கொண்டு இருந்தார் என்றால் சரிதான். விபத்தைப் பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. விபத்தில் இறந்து போன மேகநாதன் குடும்பத்தார் இழப்பீடு வழக்கு தாக்கல் செய்து இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொண்டார் என்றால் கேள்விப்பட்டேன். நான் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்று சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல பொய் சாட்சி அளிக்கிறேன் என்றார் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை